013332/08
Director of Municipal Administration
05 MAR 2009
Chepauk, Chennai-600 005.

## சுருக்கம்

பணியமைப்பு – நகராட்சி நிர்வாகம் – பொது சுகாதாரத் துறையில் பணியாற்றும் பெண் பணியாளர்களின் பதவிகள் பெயர் போன்று நகராட்சியில் பணிபுரியும் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் மகப்பேறு உதவியாளர்கள் மற்றும் சுகாதாரப் பார்வையாளர்களின் பதவிபெயர்கள் மாற்றம் செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(நப.1) துறை

அரசாணை (நிலை) எண்.34 நாள்:03.03.2009.

படிக்கப்பட்டது:

1. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.16143/2008/எச்3, நாள் 30.04.2008.
2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.31825/2008/எச்3, நாள் 20.12.2008.

-----

ஆணை:–

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதத்தில், நகராட்சி, மாநகராட்சிகளில் பணிபுரியும் சுகாதாரப் பணியாளர்களும், சுகாதாரப் பார்வையாளர்களும் பொது சுகாதார துறையில் பணியாற்றுபவர்களைப் போன்றே கல்வித் தகுதியும், பயிற்சியும், ஒரே விதமான பணியும் மேற்கொண்டு வருவதால், பொது சுகாதாரத் துறையில் பணியாற்றும் பெண் பணியாளர்களின் பெயர்கள் அரசு ஆணை (நிலை) எண்.2150, இந்திய மருத்துவம், ஹோமியோபதி மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 04.11.1998–ல் மாற்றப்பட்டுள்ளதை போன்று நகராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களின் பதவிகளின் பெயரையும் பின்வருமாறு மாற்றம் செய்திட கேட்டு தமிழ்நாடு உள்ளாட்சி பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் மகப்பேறு உதவியாளர்கள் சங்கம் தமது மனுவில் கோரியுள்ளனர் என்றும், அவ்வாறு தமிழ்நாடு உள்ளாட்சி பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் மகப்பேறு உதவியாளர் நலச்சங்கத்தினரால் கேட்டுள்ளவாறு பதவிகளின் பெயர் மாற்றம் செய்து உரிய உத்தரவு வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

<u>பொதுசுகாதாரத் துறை</u>

<u>அரசு (நிலை) ஆணை எண்.2150, இந்திய மருத்துவம், ஹோமியோபதி மற்றும் குடும்பநலத் துறை, நாள் 04.11.1988.</u>

| | முந்தைய பெயர் | தற்போது உள்ள பெயர் |
|---|---|---|
| a) | Auxiliary Nurse Midwife / Multipurpose Health Worker (Female) | Village Health Nurse<br>கிராம சுகாதார செவிலியர் |
| b) | Lady Health Visitor / Multipurpose Health Supervisor (Female) | Sector Health Nurse<br>பகுதி சுகாதார செவிலியர் |

<u>நகராட்சி</u>

| | தற்போது உள்ள பெயர் | மாற்றம் கோரும் பெயர் |
|---|---|---|
| a) | Multipurpose Health Worker (Female), Maternity Assistant<br>பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் மகப்பேறு உதவியாளர்கள் | Urban Health Nurse<br>நகர சுகாதார செவிலியர் |
| b) | Health Visitor<br>சுகாதாரப் பார்வையாளர் | Sector Health Nurse<br>பகுதி சுகாதார செவிலியர் |

2. நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலித்தது. அரசு ஆணை (நிலை) எண்.2150, இந்திய மருத்துவம், ஹோமியோபதி மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 04.11.1988–ல் கீழ்க்கண்டவாறு மாற்றப்பட்டுள்ளதை போன்று நகராட்சிகளில் பணிபுரியும் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் மகப்பேறு உதவியாளர்கள், சுகாதாரப் பார்வையாளர்கள் ஆகிய பதவிகளின் பெயரை பின்வருமாறு மாற்றம் செய்யலாமென அரசு முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது.

பொதுசுகாதாரத் துறை

அரசு (நிலை) ஆணை எண்.2150, இந்திய மருத்துவம், ஹோமியோபதி மற்றும் குடும்பநலத் துறை, நாள் 04.11.1988.

| | முந்தைய பெயர் | தற்போது உள்ள பெயர் |
|---|---|---|
| a) | Auxiliary Nurse Midwife / Multipurpose Health Worker (Female) | Village Health Nurse<br>கிராம சுகாதார செவிலியர் |
| b) | Lady Health Visitor / Multipurpose Health Supervisor (Female) | Sector Health Nurse<br>பகுதி சுகாதார செவிலியர் |

நகராட்சி

| | தற்போது உள்ள பெயர் | மாற்றம் கோரும் பெயர் |
|---|---|---|
| a) | Multipurpose Health Worker (Female), Maternity Assistant<br>பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் மகப்பேறு உதவியாளர்கள் | Urban Health Nurse<br>நகர சுகாதார செவிலியர் |
| b) | Health Visitor<br>சுகாதாரப் பார்வையாளர் | Sector Health Nurse<br>பகுதி சுகாதார செவிலியர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி
அரசுச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 600 005.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை – 600 035.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
நகல்:– மக்கள் நலம் மற்றும் குடும்பநலத்(என்) துறை, சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் அவர்களின் தனிச் செயலர், சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2) துறை, சென்னை – 600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.